Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.
SESSIONS CASE NO.23/2021

Deposition of PW6 Witness for Defence

Defence Court

Name : A.MadhanKumar Caste:

Father's Name : Arumugam Calling :

Village : Religion:

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 30 March 2023.

(A1 is produced, A2 to A5 are present)

**முதல் விசாரணை-**

1. நான் அடையாளம்பட்டு கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலரின் நிர்வாக அலுவலக உதவியாளராக பணியாற்றிவருகிறேன். கோலடி கிராமத்தின் பொறுப்பு கிராம உதவியாளராக உள்ளேன். இவ்வழக்கு சம்பவத்தின் போதும் நான் கோலடி கிராமத்தில் பொறுப்பு உதவிளாளராக இருந்தேனா என்றால் இருந்தேன். இவ்வழக்கு சம்பவ காலத்திலும் நான் மேற்கூறிய பொறுப்புகளில் இருந்து வந்தேன். 12.09.2020 அன்று எனத கிராம நிர்வாக அதிகார கீதாலஷ்மி காலை 11.00 மணி அளிவில் எனக்கு போன் செய்து காவல் நிலையத்தில் இருந்து தகவல் வந்தது என்றும் அதன்படி கோலடியில் ஒரு கொலை நடைபெற்றுள்ளத என்றும் கூறினார் அதன்படி நானும்கீதாலஷ்மியும் அங்கு சென்றோம்.

2. அங்கு போலிசார் இருந்தாாகள் அவர்கள் அந்த சம்பவஇடத்தில் இரந்து ரத்தம்படிந்த மண் மற்றும் மாதிரி மண் , ரத்தம் படிந்த முடி மற்றும் ரத்தம் படியாத முடி ஆகியவற்றை சேகரித்துக் கொண்டிருந்தார்கள் .. அதை கைபப்பற்றியதற்கான மகசரில் முதலாவதாக கீதாலஷ்மியும், 2வததாக நானும் கயொப்பம் இட்டோம்.அந்த மகசர் அதா.சதா 3. மறுநாள் 13.09.2020 அன்று கீதாலஷ்மியும் நானும் பணியில் இருந்த

போது காவல் நிலையத்தில் இருந்து கீதாலஷ்மிக்கு அழைப்பு வந்தது. அதன் பேரில் அயனம்பாக்கம் 3 சிலை அருகில் உள்ள இடத்திற்கு சென்றோம். அங்கு 5 நபர்களை போலிசார் கைது செய்து வைத்திருந்தார்கள். மேற்சொன்ன அந்த 5 நபர்களும் இந்நீதிமன்றத்தில் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். அவர்கள் அப்போத ஜீப்பில் உட்கார்ந்திருந்தார்கள்.

3. அந்த 5 எதிரிகளும் அவர்களாக ஒப்புக் கொண்டு தனித்தனியாக வாக்குமூலம் கொடுத்தார்கள். அந்த வாக்குமூலத்தில் முதலில் கீதாலஷ்மியும் அடுத்தபடியாக நானும் 2வதாக கையொப்பம் போட்டேன். ( 1வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாடசியினன் கையரொயப்பம் அ.சா.ஆ 4 ஆகவும், 2வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சியின் கையொப்பம் ஆ.தா.சா.அ 5 ஆகவும், 3வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சியின் கையொப்பம் ஆ.தா.சா.அ 6 ஆகவும், 4வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சியின் கையொப்பம் ஆ.தா.சா.அ 7 ஆகவும் மற்றும் 5வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சியின் கையொப்பம் ஆ.தா.சா.அ 8ஆகவும், குறியீடு செய்யபப்படுகிறது). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

4. அதன் பின் 1ம் எதிரியி லால் பிரகாஷ் முட்புதரில் இருந்து ஒரு கத்தி எடுத்து வந்து ஆஜர் செய்தார். அந்த கத்தி தான் என்னிடம் காண்பிக்கப்படும் பொருள். (அது சா.போ.1 ஆக குறியீடு செய்யபபட்டுகிறது.) அதை கைப்பற்றியதற்கான மகசரில் கீதாலஷ்மி 1வது ஆகவும் நான் 2 வது ஆகவும் கையொப்பம் இட்டுள்ளேன்.(அந்த மசகர் ஆ.தா.சா.அ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது) திருவேற்காடு ஆவடி செல்லும் அருகில் இருந்து லால் பிரகாஷ் ரத்தக் கரை படிந்த நீலம் பிரவுன் சாம்பல் நிற சட்டையை எடுத்து ஆஜர் செய்தார். என்னிடம் காட்டப்படும் சட்டையும் அது தான். (அந்த மசகர் சட்டை சான்று பொருள் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது) அதை கைப்பற்றியதற்கான கீதாலஷ்மி 1வது ஆகவும் நான் 2 வது ஆகவும் கையொப்பம் இட்டுள்ளேன் அந்த மகசர் ஆ.தா.சா. 10 ஆக குறியீடு செய்யபபட்டுகிறது. போலிசார் இது சம்மந்தமாக விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

1. 12.09.2020 அன்று சம்பவம் நடந்தது சம்மந்தமாக விவரத்தை போலிசார் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் இருந்து எனக்கு நேரடியாக தகவல் வந்ததா என்றால் இல்லை. வி.ஏ.ஓ கிதாலஷ்மிக்கு எழுத்த பூர்வமாக தகவல் வந்ததா என்றால் இல்லை. காலை 11.00 மணிக்கு எனக்கு தகவல் கிடைத்தது. தகவல் கிடைத்தபின் சம்பவ இடத்திற்கு நான் பைக்கில் சென்றேன் அந்த விரவத்தை போலிஸ் விசாரனையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. கீதாலஷ்மியும் என்னுடன் வந்தார். பகல் 11.45 அளவில் சம்பவ இடத்திற்கு சென்றேன். அப்போது போலிஸ் மற்றும் ஊர் மக்கள் அங்கு இருந்தார்கள்.

2. நான் செல்லும் போத ரத்தம் படிந்த மண் ரத்தம் படியாத மண் எந்த அதிகாியின் கையில் இருந்தது என்றால் போலிஸ் கையில் இருந்தது. அவர் பதவி பெயர் தெரியாது. அந்த சான்று பொருட்களை போலிசார் ஜீபிபல் வைத்திருந்தார்களா என்றல் தரையில் இருந்து சேகரித்து எங்கள் முன்னிலையில் வைத்திருந்தார். முதலில் கரைபடிந்த மண்ணும் பின்னர் முடியும் எடுத்தார்கள். பொதுவாக பார்பதற்கு பெயின்டும் மனித ரத்தமும் ஒரே மாதிரி இருக்கும் என்றால் சரியல்ல. அந்த பொருட்களை டப்பாவில் எடுத்தார்களா அல்லது பாலிதீன் பையில் எடுத்தார்களா என்று குறிப்பிட்டு சொல்லிவல்லை என்றால் சரிதான். அதை எதிர் வைத்து போலிசார் எடுத்து சென்றார்கள் என்றால் பாலிதீன் கவரில் வைத்த எங்கள் முன்னர் எடுத்து சென்றார். சுமார் 40 நிமிடம் அங்கு இருந்தேன்.

3. 13.09.2023 அன்று எழுத்துப்பூர்வமாக காவல் நிலையத்தில் இருந்து எங்களுக்கு தகவல் வந்ததா என்றால் இல்லை. அன்றைய தினம் மதியம் 3.00 மணி அளவில் கீதாலஷ்மியும் நானும் சென்றோம். சம்பவதின்போது காவல்அதிகாரிளும் பொது மக்களும் இருந்தார்கள். அந்த இடத்தில் லால்பிரகாஷ், செந்தில், மற்றும் 3 நபர்கள், அவர்கள் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை, போலிசார் பிடித்து வைத்திருந்தார்கள். அந்த 5 நபர்களையும் போலிசசார் படித்த ஜீப்பில் முகத்தை மூடி வைத்திருந்தார்களா என்றால்,ஆம். அங்கு 40 நிமிடம் நானும் விஏஓவும் இருந்தோம். அதன் பின்னர் கிளம்பிவிட்டோம்.

4. நானும் வி.ஏஓ வும் 8 ஆவணத்தில் கையொப்பம் இட்டோம். 8 ஆவணங்கள் என்ன வென்று சொல்ல முடியுமா என்றால் முடியும். 8 ஆவணங்களை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்த பார்த்து தான் கையொப்பம் இட்டேன். அந்த ஆவணங்களை எங்கு வைத்து தயார் செய்யப்பட்டதோ அங்கு அங்கு வைத்த கையொப்பம் போட்டேன். அந்த ஆவணங்கள் ஒரு சில தட்டச்சு செய்யப்படது என்றால் சரிதான். ஒப்புதல் ஆவணம் எங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்றால் தெரியாது. அதை யார் டைப் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது என்றால் தெரியாது. எதிரிகள் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்ற தனிப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. எதிரிகள் எங்கு படித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. எந்த எதிரியை எந்த தேதியில் கைது செய்தார்கள் என்றால் 13.09.2020 அன்று போலிசார் எதிரிகளை கைது செய்ததாகள். ஒரே இடத்தில் வைத்த கைது செய்தார்களா வெவ்வேறு இடத்தில் வைத்து கைதுசெய்தார்களா என்றால் விவரம் தெரியாத. முதலில் யாரை கைது செய்தார்கள் அதன் பின் யார் யாரை கைது செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.

5. சான்று பொருள்கள் கைபற்ற பட்ட இடததிற்கு நானும் விஏஓ வும் தனியாக சென்றோம். மாலை சுமார் 04.30 - 05.00 மணி அளவில் சட்டையைபோலிசார் கைபப்றினார். அதில் பிராண்ட பெயர் உள்ளதா என்றால் தெரியாது. கத்தியின் வடிவத்தை குறித்து நான் சொல்லவில்லை. 12.09.2020 மற்றும் 13.092020 ஆகிய தினங்களில் சம்பவஇடத்திற்கோ உரிய இடங்களுக்கோசெல்லவில்லை என்றும் என் முன்னிலையில் எந்த ஒரு பொருட்களும் கைபற்ற பட வில்லை என்றும் , எதிரிகள் எவரும் கைது செய்யவீலை என்றும் அவர்கள் எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்க வில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்லியிருப்பது பொய் என்றும் சொன்னால் சரியல்ல. அன்றைய தினத்தில் 4 பேர் தான் கைது செய்யததார்கள் 5போா் கைது செய்யவில்லை என்றும் ஆதலால் நான் சொல்லியிருப்பது உண்மை அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நான் ஒரு அரசு ஊழியர் என்பதால் போலிசார் கேட்டுக் கொண்டதன் பேரில் அவர்களுக்கு அனுசரனையாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.